KANTON AARGAU

DEPARTEMENT
BILDUNG, KULTUR UND SPORT
Abteilung Volksschule

ஆகஸ்ட் 2026

# சிறுவர் பாடசாலையிலிருந்து (Kindergarten) ஆரம்பப்பாடசாலைக்கு (Primarschule) வகுப்பேற்றம் பற்றிய தகவல்கள்

## சிறுவர் பாடசாலையிலிருந்து ஆரம்பப்பாடசாலைக்கு வகுப்பேற்றம் பற்றிய பரிந்துரை நடைமுறைகள்

சிறுவர் பாடசாலையில் இருந்து ஆரம்ப பாடசாலைக்குரிய வகுப்பேற்றம், வகுப்பாசிரியரின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டே நடைபெறும். ஆர்காவ் பாடத்திட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள திறன்களைப் பொறுத்து குழந்தையின் முந்தைய வளர்ச்சி மற்றும் இதற்கு மேல் வரும் காலங்களில் குழந்தையின் திறன் மேம்பாட்டுக்கான முன்கணிப்பு ஆகியவை இந்த பரிந்துரையின் மைய அளவுகோல் ஆகும். சிறுவர் பாடசாலை ஆசிரியர், பாடசாலை நாட்களில் அதிக அளவு செயல்முறை வேலைகளைக் (உதாரணமாக தனித்து செய்யக்கூடிய வேலைகள், படம் வரைதல், செய்த கைவேலைகளின் படங்கள், தன்னைப் பற்றிய புரிதல் என்பன) கொடுத்து பிள்ளையின் அறிவை கணிப்பார். பரிந்துரைக்கும் இந்த ஆவணங்களைக் காரணம் காட்டியே சிறுவர் பாடசாலை ஆசிரியர் தனது பரிந்துரையைப் பெற்றோருக்கு எடுத்துரைப்பார்.

சிறுவர் பாடசாலை ஆசிரியர் ஆரம்ப பாடசாலைக்கு வகுப்பேற்றப் பரிந்துரை செய்யும் போது, பிள்ளையின் முன்னேற்ற வளர்ச்சியைக் கருத்தில் கொள்வார். பிள்ளைக்கு அடிப்படை திறமைகள் குறைந்து மேலதிக கவனிப்பும் தேவைகளும் அவசியமான பட்சத்தில், அறிமுகத் தயார் வகுப்பிற்கு (Einführungsklasse), அதற்குரிய விசேஷ வகுப்பிற்கு அல்லது மீண்டும் ஒரு வருடம் (மூன்றாவது வருடம்) சிறுவர் பாடசாலைக்கே அனுப்பப்படுவார். குறிப்பாக, சிறுவர் பள்ளியின் முதல் ஆண்டில் அரை நாளுக்கு மேல் விடுமுறை அளிக்கப்பட்ட குழந்தைகளுக்கு, சிறுவர் பள்ளி ஆசிரியர் சிறுவர் பள்ளியின் இரண்டாம் ஆண்டை மீண்டும் தொடர பரிந்துரைக்கலாம்.

### நடைமுறை

ஒன்றாவது சிறுவர் பாடசாலையின் போது ஆசிரியர் பெற்றோருடன் சேர்ந்து மதிப்பீடு செய்யும் அறிக்கையை (Einschätzungsbogen) வைத்தே பிள்ளையின் அப்போதைய அறிவு வளர்ச்சித் திறனைக் கணிக்கலாம். இரண்டாவது சிறுவர் பாடசாலையின் போது பிப்ரவரி - ஏப்ரல் மாதத்திற்கு இடையில் ஆசிரியர் பெற்றோருடன் தொடர்பு கொண்டு வகுப்பேற்றம் பற்றிய ஒரு பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விடுப்பார். குழந்தையின் வளர்ச்சியைப் பொறுத்து, குழந்தையும் இந்த பேச்சு வார்த்தையில் சேர்த்துக்கொள்ளப்படும். இதனால் குழந்தை கண்டிப்பாக இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்க வேண்டும் என்ற அவசியமில்லை.

அன்றைய நிகழ்ச்சியின் போது சிறுவர் பாடசாலை ஆசிரியரும் பெற்றோரும் வகுப்பேற்றம் அல்லது மீண்டும் ஒரு வருடம் சிறுவர் பாடசாலையில் தொடர்தல் பற்றிய பேச்சு வார்த்தையில் ஒருநிலைப்பட்டு ஏற்றுக்கொண்டால் எழுத்து மூலம் பதிவு செய்யப்படும் அல்லது சம்பந்தப்பட்டவர்களுடன் (பெற்றோர், பிள்ளை, சிறுவர் பாடசாலை ஆசிரியர்) மேலதிக பேச்சு வார்த்தை நடைபெற்ற பின்பும் கருத்து நிலைப்பாடு ஒத்துவராமல் வேறுபடும் பட்சத்தில் இந்த முடிவுக்கு பொறுப்பான நகராட்சி அதிகாரம்[1] வகுப்பேற்றம் பற்றிய முடிவை எடுக்கும். இந்த முடிவெடுக்கும் முன் பெற்றோர் தமது தரப்பு வாதத்தினை இந்த முடிவுக்கு பொறுப்பான அதிகாரத்தின் முன் வைக்கவும் சந்தர்ப்பம் உண்டு (சட்ட விசாரணை). வகுப்பேற்றம் பற்றிய இறுதி முடிவையும் அதற்குரிய சட்டதிட்ட விளக்கங்களையும் இந்த முடிவுக்கு பொறுப்பான நகராட்சி அதிகாரம் பெற்றோருக்கு எழுத்து மூலம் அறிவிக்கும். இந்த முடிவுக்கு உடன்படாத பெற்றோர் 30 நாட்களுக்குள் பிரதேச கல்வி சபையில் புகார் செய்யலாம்.

[1] பாடசாலைக்கான ஒட்டுமொத்த பொறுப்பும் நகராட்சி மன்றத்திற்கு உள்ளது. நகராட்சி மன்றம், திரும்ப முறையீடு செய்யக்கூடிய பாடசாலை முடிவுகளை, எடுத்துக்காட்டாக தொழில் முடிவை, மன்ற உறுப்பினரிடம் அல்லது பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைக்கலாம். திரும்ப முறையீடு செய்யக்கூடிய தொழில் முடிவுகளை எடுப்பதற்கு எந்த அமைப்பு பொறுப்பு என்பதை ஒவ்வொரு நகராட்சியும் விதிமுறைகளின் தொகுப்பில் வரையறுக்கிறது.